**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.20 /2025**
**Preliminary Register :**
**Police Station : Kannagi Nagar PS**

**Deposition of witness for : LW2/PW2**

**Name : கலைச்செல்வன்**

**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026.**
**(எதிரி ஆஜர் இல்லை , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை:</u>

1. நான் தற்பொழுது பள்ளிக்கரணையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது, எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை, போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)**

புகார் நான் தரவில்லை. 06.03.2024 இரவு ஏழு மணிக்கு வீட்டு வரிகள் அமர்ந்து இருந்தபோது கரன் என்பவர் என்னை இருசக்கர வாகனத்தில் இடிப்பது போல் வந்து இடித்து விட்டார் என்றால் சரியல்ல.

2. அதனால் நான் அவரை திட்டினேன் என்றால் சரியல்ல. மறுநாள் 07.03.2024 இரவு எட்டு மணிக்கு கண்ணகி நகர் ஆறாவது குறுக்கு தெருவில் நான் இன்றைக்கு பேசிக் கொண்டிருந்தபோது எதிரி சின்னவர் எதிரி ராம்கி எதிரி ராகுல் ஆகியர்கள் என அசிங்கமாக திட்டி என்னை அடித்தார்களா என்றால் இல்லை. கீழே கிடந்த கட்டையை எடுத்து என்னை கொலை மிரட்டல் கொடுத்தார்களா என்றால் இல்லை. வெகு நாட்களாகி விட்டதால் எதிரிகள் இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கட்டையால் என்னை அடித்தார்கள் என்றால் என்னை அடிக்கவே இல்லை. எனக்கு கண்ணில் அடிபட்டதா என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை :</u> இல்லை**

**Sd/--M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.20/2025** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **Kannagi Nagar PS** |
| **Deposition of witness for** | : | **Additional witness/PW3** |
| **Name** | : | ஸ்டீபன் ஜோஸ் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2026.**
**(எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

அரசு தரப்பு முதல் விசாரணை

1. நான் தற்பொழுது கண்ணகிந கர் காவல் நிலையத்தில் சட்ட ஒழுங்கு பிரிவில் சிறப்புஉதவிஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் வேல்முருகன் என்பவர் பணி மாறுதல் காரணமாக வேறு காவல் நிலையம் சென்றுள்ளதால் இந்த வழக்கு பல மாதங்களாக நிலுவையில் உள்ளதால் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் இந்த வழக்கின் விசாரணை அதிகாரியின் கையெழுத்து எனக்கு நன்கும் தெரியும் என்ற காரணத்தினாலும் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 07.02.2024 தேதி 22.20 மணிக்கு கேளம்பாக்கம் செட்டிநாடு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திரு கலைசெல்வன்

ஆண் வயது 27 மற்றும் திரு கலையரசன் ஆண் வயது 24 என்பவர் கொடுத்த புகார் இணை பெற்று நிலைய குற்ற எண்67/2024 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) IPC இன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் 08.03.2024 ம் தேதி விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெண்ணிலா மற்றும் மகேஷ்வரி முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் அந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.03.2026 அன்று காலை 10.00 மணியளவில் கண்ணகி நகர் இந்து சுடுகாட்டில் வைத்து எதிரிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்களை கைதுக்கான காரணம் கூறி சாட்சிகள் சூர்யா மற்றும் கணேசன் முன்னிலையில் கைது செய்துள்ளார். அப்போது 1வது எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பெற்று ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. சம்பவத்தன்று பயன்படுத்திய சுமார் 2 ½ அடி நீளமுள்ள மரக்கட்டைகள் 2 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார், அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட மரக்கட்டைகள் 2 யை படிவம் 95 ல் கீழ் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. அந்த படிவம் 95 அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட மரக்கட்டைகள் 2 அ.த.சா.பொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் காயம் பட்ட நபருக்கு முதல் உதவி மற்றும் சிகிச்சை அளித்த மருத்துவர் வெண்ணிறைவன் அவர்களை விசாரணை செய்து அவர்கள் கொடுத்த விபத்து பதிவேடுகாயச் சான்றிதழை பெற்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் அந்த காயைச் சான்றிதழ் அரசு தரப்பு சான்று ஆவணம்7 ஆக

குறியீடு செய்யப்படுகிறது.  இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் ஒன்று முதல் 8 வரை சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் இந்த வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்ட பிரிவுகள் மாறுதல் அறிக்கை தயார் செய்து சட்டபிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii), 326 IPC ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் மற்ற சாட்சிகள் அனைவரும் பிறழ் சாட்சியாக மாறி உள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு புள்ளிவிவர கணக்குக்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

**Sd/–M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**